மாகாண கல்வித் திணைக்களம் - வாராந்தப் பாடசாலை

வாரம் - 04

பாடம்: தமிழ்மொழியும் இலக்கியமும்

தரம்: 11

தொகுப்பு இரா.யசந்தன்
கே/உந்துகொடை தமிழ் மகா வித்தியாலயம்

Department of Education, Sabaragamuwa Province/ Weekly School

- எல்லா வினாக்களுக்கும் விடை தருக
- 1 தொடக்கம் 5 வரையான வினாக்கள் ஒவ்வொன்றின் கீழும் 1, 2, 3, 4 என்று இலக்கமிடப்பிடப்பட்டிருக்கும் தெரிவுகளில் சரியானது அல்லது மிகப்பொருத்தமான விடையை தெரிவு செய்க

---

1. “தண்டாமரையினுடன் பிறந்தும்” என்பதில் தண் என்பது
   i. குளிர்   ii வெப்பம்   iii சூடு   iv தேன்
2. “அண்ணல் யானை அணிதேர் புரவி” என்பதில் புரவி என்பது
   i. அழகு   ii வரிசை   iii குதிரை   iv பெருமை
3. “அந்தக்கிணற்றின் அடியை காணமுடியாது” என்பதில் அடி என்பதன் எதிர்ப்பதம்
   i. நுனி   ii முடி   iii மேல்   iv சேய்மை
4. “அன்பு கொள்ளல் ஆபத்தானது” என்பதில் இடம்பெறும் அன்பு என்பதன் எதிர்ப்பதம்
   i. வெறுப்பு   ii வன்பு   iii ஆசை   iv நிராசை
5. “இடுக்கண் நீக்குதல் உத்தமநண்பனின் பண்பு” இங்கு இடுக்கண் என்பது
   i. கோபம்   ii துன்பம்   iii பகை   iv வெறுப்பு

பகுதி 2

01. பின்வருவனவற்றுக்கு சுருக்கமான விடை தருக

1. பின்வருவனவற்றுள் ஓரெழுத்து ஒரு மொழியினை இனங்கண்டு வேறுபடுத்துக
   ஆ, ப, பா, நா, ந, கா, தீ, கோ, எ
2. பின்வரும் சொற்களுள் பகுபதச்சொற்களை தெரிவு செய்க
   மலர், அரசன், தீ, பொன்னன், நடந்தான், மரம், அறிஞன்
3. பகுபத உறுப்புக்கள் எத்தனை? அவை எவை?
4. “நான் பார்த்தபோதெல்லாம் குழந்தை போல சிரித்தாள் அவள்” என்பதில் எழுவாய் பயனிலையை குறிப்பிடுக
5. நாலடியார் எத்தனை அதிகாரங்களை, எத்தனை பாடல்களை கொண்டது?

02. பின்வரும் பாடலை, உரைநடையை படித்து அதன் கீழ் தரப்படுகின்ற வினாக்களுக்கு விடை தருக

1. “மாகமடங்கலும் மால்விடையும் பொன்னாகமும்
   நாகமும் நாண நடந்தார்”

   i. இங்கு நடந்தார் என பண்டிதமணி யாரைக்குறிப்பிடுகின்றார்?
   ii. நாகம் என்ற சொல் பெற்றுவரும் இரு பொருட்களும் எவை?
   iii. இங்கு கையாளப்படும் சொல்லணிகளை குறிப்பிடுக

2. அக்கூட்டத்திற்கு தலைமை வகிக்கவேண்டியவர் ஆறுமுகநாவலர் அவர்கள். ஆனால் அன்று அவர் தலைமை வகிக்கவில்லை. அந்த வித்தியாசாலை மண்டபத்தில் ஒரு தூணுக்கு அருகில் திண்டுத்தலையணை ஒன்றில் அடிக்கடி சாய்ந்து கொண்டும், மடியிலும் பங்கங்களிலும் அடுக்கிய தலையணைகளில் கைகளை ஊன்றிக்கொண்டும் கூட்ட நடைமுறைகளை அவதானித்துக்கொண்டிருந்தார்

   i. அன்றைய கூட்டத்திற்கு நாவலர் தலைமை தாங்க முடியாமைக்கான காரணம் என்ன?
   ii. தலைமை தாங்கியவர் யார்?
   iii. நாவலர் அமர்ந்திருந்த தோற்றம் எவ்வாறு எடுத்துக்காட்டப்படுகின்றது?